# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,805 — 1959 ජූලි 10 වැනි සිකුරාදා — 10.7.1959**

11,805ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆடி மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 1938 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 1936 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

**4 B ம் மாதிரிப்பத்திரம்**

**1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்**
**சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்**

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி அல்பிறெட் எட்வின் கோக்களி மொறுக்கொட ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

கொழும்பு,
1959 ம் ஆடி மீ 6 ந உ.

அ. எ. கோ. மொறுக்கொட,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் அதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| M 7572—6.7.51 | பீற்றர் சுரோன்மை அந்தோனி, குறூசு பெர்னாந்து, 86, முற்றவெளி வீதி, மாத்தளை | யோச்சம்மாள் (மனைவி), தூசநேவிசு இராசேசுவரி (மகள்), யோசேப்பின் மரிய கனூட்டா (மகள்) |
| M 8777—31.7.51 | வீரப்பபிள்ளை முத்துச்சாமிப்பிள்ளை, 498, நெடுஞ்சாலை மாத்தளை | செல்லம்மாள் (மனைவி), சோமசுந்தரம் (மகன்), சண்முகம் (மகன்), சிவஞானம் (மகன்) |
| P 1054—28.9.50 | பெரியாம்பளை ரேசா, மவுண்ற் வேணன் தோட்டம், பத்தனை | பொன்னம்மாள் (மனைவி), தனலெட்சுமி (மகள்), செல்லம் (மகள்) |
| P 1157—29.9.50 | வெங்கடாசலம் வீராச்சாமி, பூங்கந்தைப் பிரிவு, மவுண்ற் வேணன் தோட்டம், பத்தனை | அலமேல் (மனைவி), பாக்கியம் (மகள்), ஐயாச்சாமி அல்லது வீரையா (மகன்), நாகமுத்து (மகன்) |
| P 1252—26.9.50 | சின்னன் சின்னமுத்துச் சாமி, மவுன்ற் வேணன் தோட்டம், பத்தனை | பாப்பாயி (மனைவி), சின்னத்தம்பி அல்லது வெங்கடாசலம் (மகன்), பழனியம்மாள் (மகள்), இராமையா (மகன்), முத்தாயி (மகள்), நல்லம்மா அல்லது பவளாயி (மகள்) |
| P 1433—29.9.50 | குப்பன் முத்துச்சாமி, பெயர்பீல்ட் பிரிவு, மவுன்ற் வேணன் தோட்டம், பத்தனை | பெரியம்மாள் (மகள்) |
| P 1901—25.10.50 | பழனிமுத்து மருதை, வூட்டன் தோட்டம், கொட்டக்கலை | காமாட்சி (மனைவி), சுப்பையா (மகன்) |
| P 2005—25.10.50 | இராகவன் சின்னையா, கெலிவத்தைத் தோட்டம், பத்தனை | பார்வதி (மனைவி), வரதம்மா (மகள்), யானகியம்மா (மகள்) இலெச்சுமன் (மகன்), இராமன் (மகன்), அமராவதியம்மா (மகள்) |
| P 2152—25.10.50 | பெரிய வையாபுரி காத்தான், போகாவத்தைத் தோட்டம், பத்தனை | கோவிந்தம்மாள் (மனைவி) |
| P 2575—13.11.50 | செல்லன் இராமன் அஞ்சல் நிலையம், பத்தனை | அன்னபூரணம் (மனைவி), செல்லம் அல்லது முத்தம்மா (மகள்), சிவனம்மா (மகள்), முத்துச்சாமி (மகன்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| P 2926—26.10.50 .. | அடைக்கன் சிவசாமி, போகாவத்தைத் தோட்டம், கொட்டக்கலை | கறுப்பாயி (மனைவி), வேலாயி (மகள்), அழகர் (மகன்), வசந்தராதேவி (மகள்) |
| P 3548—20.10.50 .. | ஐயாக்கண்ணு சவரிமுத்து, கிளண்லியோன் தோட்டம், அக்கிறப்பத்தனை | பாக்கியம் அல்லது பக்கிரியம்மா (மனைவி), அன்னமேரி (மகள்) |
| P 3777—30.11.50 .. | பழனி கந்தசாமி, டிம்புலைத் தோட்டம், பத்தனை .. | அஞ்சலை (மனைவி), மூக்காயி (மகள்) |
| P 4079—18.11.50 .. | இராசகோபால் வேலு, கீழ்ப் பிரிவு, டிம்புலைத் தோட்டம், பத்தனை | பெரிய வள்ளி அல்லது வள்ளியம்மா (மனைவி) |
| P 4201—30.11.50 .. | வீரமுத்து பொன்னன், சின்ன திறேயிட்டன், தோட்டம், கொட்டக்கலை | பாக்கியம் (மனைவி), ஆறுமுகம் அல்லது வீரன் (மகன்) |
| P 4616—4.12.50 .. | சுப்பிராயன் பெருமாள், திறேயிட்டன், தோட்டம், கொட்டக்கலை | எல்லம்மாள் (மனைவி) |
| P 4631—9.12.50 .. | பெரியையா செல்லையா, ரப்பிறபேண் பிரிவு, ஸ்ரோனிக் கிளிவ் கூட்டம், கொட்டக்கலை | இரத்தினம்மாள் (மனைவி), சவுந்தரவல்லி (மகள்), விசுவநாதன் (மகன்), சாந்தகுமாரி (மகள்) |
| P 5023—30.11.50 .. | வயித்தி முனியாண்டி, டெவன் தோட்டம், தலவாக்கொல்லை | நல்லம்மாள் (மனைவி), வயித்திலிங்கம் (மகன்), தங்கம்மாள் (மகள்) |
| P 5038—30.11.50 .. | இன்னாசிமுத்து பழனிமுத்து, டெவன் தோட்டம், தலவாக் கொல்லை | சவுந்தரம் (மனைவி), வானத்துமேரி (மகள்), சந்தணம் (மகன்), ஜெயமணி (மகள்), பாக்கியம் (மகள்), தியாக சத்தியநேசன் (மகன்) |
| P 5107—30.11.50 .. | பாவுல் மூக்கன், டெவன் தோட்டம், தலவாக்கொல்லை .. | சமாதானம் (மனைவி) |
| P 5223—1.11.50 .. | பாச்சா நன்னுசைபு, கிளண்லியோன் தோட்டம், அக்கிறப் பத்தனை | இமாம் பீவி (மனைவி) |
| P 5289—1.11.50 .. | மரியான் அல்லது இராயப்பன் சின்னப்பன், கிளண்லியோன் தோட்டம், அக்கிறப்பத்தனை | செவத்தியம்மா (மனைவி), அந்தோனி பெர்னாந்து (மகன்), எலிசபெத் (மகள்) |
| P 5770—16.1.51 .. | சாமிநாதன் மாரிமுத்து, ஓம்வூர் தோட்டம், அக்கிறப்பத்தனை | பெருமாயி (மனைவி), சாமிநாதன் (மகன்), மாரியாயி (மகள்), சுப்பிரமணியம் (மகன்), வள்ளியம்மா (மகள்) |
| P 5785—16.1.51 .. | கறுப்பண்ணன் கறுப்பண்ணன் அல்லத் இராமசாமி, ஓம்வூட் தோட்டம், அக்கிறப்பத்தனை | செல்லம்மாள் (மனைவி) |
| P 5810—16.1.51 .. | கறுப்பன் சின்னையா, ஓம்வூட் தோட்டம், அக்கிறப்பத்தனை .. | இருளாயி (மனைவி), சண்முகம் (மகன்), கணேசு (மகன்), இராமையா (மகன்), யானகி (மகள்), வேலு (மகன்), மோகனம் (மகள்) |
| P 5812—16.1.51 .. | முத்துக்கறுப்பன் ஏகராஜ், ஓம்வூட் தோட்டம், அக்கிறப் பத்தனை | கறுப்பாயி (மனைவி) |
| P 6943—18.2.51 .. | செங்கன் பொன்னுச்சாமி, மரியாத் தோட்டம், லிந்துலை .. | பாப்பாத்தி (மனைவி), நாகம்மா (மகள்), செல்வநாயகி (மகள்), இராசம்மா (மகள்), புஷ்பமணி (மகள்), அமிர்தம் (மகள்), செல்லத்துரை (மகன்) |
| P 7229—5.3.51 .. | வெள்ளையன் பொன்னன், பெயித்திலீப் பிரிவு, கிறெயிக் கிலீத் தோட்டம், பத்தனை | நாச்சாயி (மனைவி), பூபதி (மகள்), அமராவதி (மகள்) |
| P 7236—5.3.51 .. | அரசன் கோபால், பெயித்திலீப் பிரிவு, கிறெயிக்கிலீத் தோட்டம், பத்தனை | பொன்னம்மாள் (மனைவி) |
| P 7408—31.10.50 .. | வரதன் பச்சைமுத்து, பிறேமோர்த் தோட்டம், அக்கிறப் பத்தனை | அன்னம்மாள் (மனைவி) |
| P 7412—31.10.50 .. | வேலாயுதம் முத்துச்சாமி, பிறேமோர்த் தோட்டம், அக்கிறப் பத்தனை | பொன்னுத்தாள் (மனைவி) |
| P 8151—3.5.51 .. | பெருமாள் இராமன், கீழ்ப் பிரிவு, கிருன்லித் தோட்டம், லிந்துலை | இரத்தினம் (மனைவி), பால்சுப்பிரமணியம் (மகன்), இராசம்மா (மகள்) |
| P 8999—12.5.51 .. | முனியாண்டி சந்தணம், போறெஸ்ற் பிறீக் பிரிவு, கிறெயிக்கிலீத் தோட்டம், பத்தனை | யானகி (மகள்), அம்மாவாசி (மகன்) |
| P 9524—18.7.51 .. | இராமசாமி பெரியசாமி, டெறிக்கிளேயர்த் தோட்டம், கொட்டக் கலை | தெய்வானை அல்லது கமலம் (மனைவி), ஜெயராஜ் (மகன்), இராமராஜ் (மகன்), சுசீலாராணி (மகள்) |
| P 9592—2.8.51 .. | கறுப்பையா சேருவாசன் பொன்னையா, மேற் பிரிவு, டிம்புலைத் தோட்டம், பத்தனை | பார்வதி அல்லது பொன்னுச்சி (மனைவி), இலெட்சுமி அல்லது தனபாக்கியம் (மகள்), இலெட்சுமி அல்லது கமலம் (மகள்), யோகநாதன் (மகன்) |
| I 6484/P—27.7.51 .. | அண்ணாமலை இராமலிங்கம், போகாவத்தைத் தோட்டம், கொட்டக்கலை | ஞானம்மா (மனைவி), முனியப்பன் (மகன்), சிவபாலன் (மகன்) |
| K 12875/P—4.8.51 .. | சாத்தப்பிள்ளை தேவராயபிள்ளை, 68, ஒல்புறூக் சந்தை, அக்கிறப்பத்தனை | சிவபாக்கியம் (மனைவி), சுப்பிரமணியம் (மகன்) |
| NE 24/P—10.11.49 .. | சோலைமுத்து இராமசாமி, வைதன்சைட் தோட்டம், கொட்டக் கலை | மாரியாயி அல்லது மனோன்மணி (மனைவி), கமலா (மகள்) கனகரத்தினம் (மகன்) |
| T 810—3.8.51 .. | நீறுதகாத்தில் கோப்பு வேலாயுதன், 208, டைக் வீதி, 3ம் பிரிவு, திருக்கோணமலை | எட்டியாராச்சிக்கே பொடிகாமி (மனைவி), வேலு (மகன்), தர்மதாசா (மகன்), வசந்தராசா (மகன்), சரசுவதி (மகள்) |
| T 1025—4.7.51 .. | ஒகத்தின் யோச் சூசா கைம்பெண் பிருன்கினு ஈஸ்ரேண் பேக்கறி, 181, டொக்யாட் தெரு, திருக்கோணமலை | ஒகந்தினு (மகள்), அனெற் (மகள்), யோச் (மகன்), பர்பாரா (மகள்) |
| CC 3723/G/M/T—25.7.51 | தென்னக்கோன் இரஞ்சித் சுசிவன், 2 ம் பிரிவு, கல்முனை .. | காந்திமதி (மனைவி), பேள் திலகமலர் (மகள்), பேர்சி பலாச்சந்திரா (மகன்) |
| V 8323/W/V—3.8.51 | பம்பயன் இராமசாமி, எல்வேட்டன் தோட்டம், ஆலி-எல .. | வள்ளியம்மா (மனைவி), பூரணம் அல்லது தெய்வானை (மகள்), தேவகி (மகள்), ரத்தினபூபதி (மகள்), புஷ்பவதி (மகள்), தியாகலிங்கம் (மகன்) |

LD—B 80/44.

## 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளத்தீர்ப்புச் சங்கச் சட்டம் அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கம் சம்பளத்தீர்ப்புச் சங்கச்சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம், பீடி உற்பத்தித்தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்திற்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள மேற்படி சங்கத்தின் தீர்மானங்களை அவ் வட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு இச்சங்கம் மாற்ற உத்தேசிக்கிற தென்று, 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்க சட்டத்தாலும், 1953 ம் ஆண்டின் 5 ம் இலக்க சட்டத்தாலும், 1957 ம் ஆண்டின் 27 ம் இலக்க சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட மேற்கூறிய சட்டத்தின் 26 (A) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறது.

மேற்கூறிய யோசனைக்கு ஆட்சேபனைகள் 1959 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ந் திகதி பகல் 12 மணிவரைக்கும் சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்குக் காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

சா. ப. குமாரசிங்க,
பீடி உற்பத்திற் தொழிற்
சம்பளத்தீர்ப்புச்சங்கத் தலைவர்.

கொழும்பு,
1959 ம் ஞு ஜூலை மீ 1 ந உ.

### அட்டவணை

பீடி உற்பத்தித் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1957 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 11,208 ம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தையிட்டு மேலும் மாற்றப்படுகின்றன :—

" II—ம் பாகம்

**துண்டுவேலைக்குரிய கிழெல்லைச் சம்பளவீதங்கள்**

(பீடி சுருட்டுதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தல், சுற்றும் இலைகளை வெட்டுதல், சுற்றிலைகளுள் " பீடிப் புகையிலையை " நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளை நூலால் கட்டுதல் ஆகியன உட்பட) " நூல் " பீடி சுருட்டுதற்குத் துண்டுவேலைக்குரிய கிழெல்லைச்சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(அ) 2 அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 5.00,

(ஆ) 2½ அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 6.00,

(இ) 3 அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 7.00.

(சுற்றிலைக்குள் " பீடிப் புகையிலையை " நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளை நூலால் கட்டுதல் ஆகியன உட்பட ஆனால் சுருட்டுதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தலும் சுற்றும் இலைகளை வெட்டுதலும் நீங்கலாக) " நூல் " பீடி சுருட்டுதற்குத் துண்டு வேலைக்குரிய கிழெல்லைச் சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

(அ) 2 அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 3.34,

(ஆ) 2½ அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 4.00,

(இ) 3 அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 4.66.

(சுருட்டுதற்குச் சுற்றிலைகளைச் தயாரித்தல் உட்பட) சுற்றும் இலைகளை வெட்டுதற்குத் துண்டுவேலைக்குரிய கிழெல்லைச் சம்பளவீதங்கள் பின் வருமாறு இருத்தல் வேண்டும் :—

(அ) 2 அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 1.67,

(ஆ) 2½ அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 2.00,

(இ) 3 அங்குல நீளமுள்ள பீடிகளுக்கு 1,000 க்கு ரூ. 2.34.

சுருட்டிய பீடிகளைச் சுற்றி வட்டநாம விலாசம் ஒட்டுதற்குத் துண்டு வேலைக்குரிய கிழெல்லைச் சம்பள வீதம் 1,000 பீடிகளுக்கு 50 சதமாக இருத்தல் வேண்டும்,"

# நானாவித அறிவித்தல்கள்

### அறிக்கை

1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினாலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், 1959 மே 29 ம் தேதிய அரசாங்க வர்த்தமானி இல. 11,752 ல் பிரகடனப்படுத்தப்பட்ட, வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பகுதித் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள புத்தூர் கிழக்கு–மேற்கு, ஆவரங்கால், சிறுப்பிட்டி கிராமங்களில் முன்னடைப்பான் (பிளாக்குவாட்டர்) நோய் இப்பொழுது இல்லையென்றும் அப்பிரதேசம் " தொற்று நோய்ப்பிரதேசம் " அல்லவென்றும், இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தேதி முதல் இப்பிரகடனம் நடைமுறைக்கு வருகின்றது.

ஏ. அமரசிங்க,
அரசாங்க பிரதம மிருகவைத்தியர்.

அரசாங்க பிரதம வைத்தியர் களரி,
பேராதனை, 29.6.59.

---

### பிரகடனம்

வட மாகாணம், வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா வடக்குப் பகுதி காரியாதிகாரியின் பிரிவிலுள்ள புளியங்குளம் கிராமாதிகாரி பகுதி, கனகராயன் குளம், மாங்குளம், கிராமாதிகாரியின் பகுதி ஆகியவற்றிலுள்ள கால்நடைகளிடையே " முன்னடைப்பான் " நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாண திருத்தச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினாலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளிற்கு அமையவும் அரசாங்க பிரதம மிருக வைத்தியரான ஆரியதாச அமரசிங்கா ஆகிய யான், கீழ்க்குறித்த எல்லைகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு " தொற்று நோய் பிரதேசம் " எனப் பிரகடனப்படுத்துகின்றேன்.

வடக்கு : மாங்குளம்–துணுக்காய் வீதியும், மாங்குளம்–முல்லைத்தீவு வீதியும் ;

தெற்கு : வவுனியாவடக்கு எல்லை கிராமாதிகாரிகள் பகுதி ;

கிழக்கு : கனகராயன் ஆறு ;

மேற்கு : வவுனியா மாவட்ட எல்லை.

இப்பிரகடனம் நீக்கப்படும்வரை இக்கிராமங்களில் இருந்தும் கிராமங்களுக்கும் கால்நடைகள் அல்லது மாட்டு வண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென அதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின்கீழ் பிரகடனஞ்செய்கின்றேன்.

" தொற்றுநோய் " பிராந்தியத்தில் உள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாளவேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தம் அவதானத்துக்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை முல்லைத்தீவில் உள்ள மிருக வைத்தியரிடமிருந்தும் வவுனியா வடக்குப் பகுதி காரியாதிகாரியின் களரியிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

ஈண்டுப்பொறிக்கப்பட்ட தேதி முதல் இப்பிரகடனம் செயல்முறைக்கு வந்துள்ளது.

ஆரியதாச அமரசிங்க,
அரசாங்க பிரதம மிருக வைத்தியர்.

அரசாங்க பிரதம மிருகவைத்தியர் களரி,
பேராதனை, 1.7.59.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.